**கவனிக்க.-** *2024.03.07 ஆந் திகதிய 2375 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2376 - 2024 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2024.03.15**

*2376 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 104 |


**கவனிக்க.-** பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் 2024, மாச்சு மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


103 - B 82549 - 353 (2023/03)

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75720.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L10/KL/LTL/50.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், கல்பிட்டி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஆனவாசல் 631/A, கிராம அலுவலவர் பிரிவினைச் சேர்ந்த KLP/LH/OP.7/01 இலக்கமுடைய அண்ணளவான திட்டத்தின் காணித் துண்டு இல. 1, 2, 3 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 03 றூட், 15 பேர்ச் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினைச் சுற்றுலா செயற்றிட்டத்தின் பொருட்டு போக்குவரத்து மத்திய நிலையம் மற்றும் வாகனத் தரிப்பிடம் ஒன்றினை நடாத்திச் செல்வதற்காக கன்செல்டிங் இன்ஜினியர்ஸ் அன்ட் ஆக்கிடெக்ட்ஸ் எசோசியேட்ஸ் (பிறைவட்) லிமிடட் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : களப்பினை அண்மித்த கண்டற் சதுப்பு நில ஓரம்;
கிழக்கு : வாடி மற்றும் களப்பு;
தெற்கு : ஜனசவிபுர கிராமம்;
மேற்கு : பாதை.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.02.01 இலிருந்து முப்பது வருடங்கள் வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2024 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2024 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர், செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2024.02.01 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகை பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 22.

03 - 275

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/75795.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NWP/PLC/L10/MK/LTL/35.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், மஹகும்புக்கடவல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ஆனவாசல் 631 செம்புக்குளி கிராம அலுலவர் பிரிவினைச் சேர்ந்த மாவத்தேவெவ கிராமத்தின் TO. PO. P. P. 28 இன் துண்டு இலக்கம் 852 இன் பொருட்டு குடியேற்ற உத்தியோத்தர் மூலம் வரையப்பட்ட அண்ணளவான நிலவரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 30 ஏக்கர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணியினைக் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு புஸ்ஸெல்ல மீட் பிரடய்சிஸ் பிறைவட் விமிடட் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பாதை;
கிழக்கு : பிரதேச சபை பாதை;
தெற்கு : அடி 20 பாதை;
மேற்கு : சமிந்த பீரிஸ் என்பவரின் காணி.

கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.11 இலிருந்து முப்பது வருடங்கள் வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர், செயற்திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக்

கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.11 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்யவோ அல்லது வேறொருவருக்குக் கைமாற்றம் செய்யவோ அனுமதி வழங்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகை பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் நிலுவைப் பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 22.

03 - 276

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/69910.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L03/KEK/04 (11).

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம், கெக்கிராவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 609, ஹீனுக்கிரியாவ கிராம அலுவலர் பிரிவின் ஹீனுக்கிரயாவ கிராமத்தின் நிலஅளவையிலாளர் மூலம் வரையப்பட்ட நில வரைபட இல. 2018/KEK/01 இனது காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 09 ஏக்கர், 01 றூட், 6.73 பேர்ச் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. ஹேரத் முதியன்சேலாகே லொக்கு பண்டா என்னும் நபர் மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : வீதி ஒதுக்கம் மற்றும் கருணாவதியினுடைய காணி;
கிழக்கு : மங்கிருஹிட்டியாவ குள ஒதுக்கம்;
தெற்கு : அரச காணி;
மேற்கு : அப்புஹாமிகே சமிந்த செனவிரத்னவினுடைய காணி.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.10.10 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(எ) குத்தகை பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 27.

03 - 277

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72795.
காணி ஆணையாளரின் இலக்கம்.: LAN/LONGTE/07/2020-1.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான மல்வத்த 01 கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மல்வத்த கிராமத்தின் நில அளவையியலாளர் மூலம் வரையப்பட்ட அண்ணளவான நில வரைபடத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள 02 றூட் அளவுடைய நிலப் பகுதியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. அப்துல் ரகீம் ரிபாயிஸ் என்பவர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கோரப்படும் காணியின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : நிலவரைபட இலக்கம் 280006 இன் துண்டு இலக்கம் 288 இன் மிகுதிப் பகுதி;
கிழக்கு : சத்தாதிஸ்ஸ வீதி;
தெற்கு : நிலவரைபட இலக்கம் 280006 இன் துண்டு இலக்கம் 288 இன் மிகுதிப் பகுதி;
மேற்கு : பீபீ. அம். 1404- 21.

02. இக்காணியானது குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (கௌரவ அமைச்சர் அவர்கள் குத்தகையை அனுமதித்த 2023.08.09 ஆம் திகதியிலிருந்து)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருவொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரரின் மூலம் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர் / காணி ஆணையாளர் / (மாகாணங்களுக்கிடையிலான) பிரதேச செயாளரின் மனம் திருப்திப்படுமாறு காணியானது அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரின் மூலம் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்டுத்தக்கூடாது;

(உ) மாகாணக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு விடப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை ஆரம்பமாகும் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் குத்தகை சுயமாகவே செல்லுபடியற்றதாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதித்தலாகாது என எண்ணும் பட்சத்தில் அவற்றுக்கான தகுந்த காரணங்களை எழுத்து மூலம் எனக்கு அறிவிக்காதவிடத்து காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 22.

03 - 278

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/62213.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: அம்/இகொ/தீப/7/7.

### முடிக்குரிய காணிப் பரிமாணங்களின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பாறை மாவட்டம் அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சேனானாயகபுர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சேனானாயகபுர எனும் கிராமத்தில் அமைந்துள்ள 280010 வரைபடத்தில் காணிதுண்டு இலக்கம் '528' இற்கான ஒரு பகுதியும் பேர்சஸ் 100 விஸ்தீரணமுள்ளதுமான அரசகாணியை வர்த்தக நோக்கத்திற்காக L. O. L. C. பினான்ஸ் பி. எல். சி குத்தகைக்குக் தருமாறு கேட்டு விண்ணப்பித்திருப்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 528 இன் எஞ்சிய பகுதி மற்றும் அணுகும் வீதி;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 528 இன் எஞ்சிய பகுதி ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 524;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 537, 538, 539, 547, 523.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அனுமதி வழங்கிய 2022.01.21 தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை**.- 2022 ஆம் வருடத்திற்கான காணியின் பிரதான விலைமதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் காணியின் சந்தைப் பெறுமதியில் 2% குத்தகை. 2022 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா. 5,000,000.00) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த காணியின் சந்தைப் பெறுமதியில் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் என்பதுடன் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடகாலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப்பணத்தின் 20% கூட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) **தவணைப்பணம்** .- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளர்/ மாகணக்காணி ஆணையாளர்/ பிரதிக்காணி ஆணையாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

(ஈ) குத்தகைக்காரர் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மாகாணக்காணி ஆணையாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகைக்கு கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) குத்தகை தொடங்கும் தினத்திலிருந்து குறைந்தது ஐந்து (05) வருடங்களாகிலும் முடியும் வரை கீழ்க்குத்தகை அனுமதிக்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாதபட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 22.

03 - 279

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74575
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: SPLC/MAT/1/1/28/3/65

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், பஸ்கொட பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 255A, பொத்தெனிய கிராம அலுவலர் பிரிவின் பொத்தெனிய கிராமத்தின் அ. நி. வ. 18 இன் காணித் துண்டு இலக்கம் 1350 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 0.0237 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை வரையறுக்கப்பட்ட பெரலபனாதர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊருபொக்க எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ள காணியானது வாணிப நோக்கத்துக்காக வரையறுக்கப்பட்ட பெரலபனாதர பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் (ஊருபொக்க) மூலம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. **கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு**:

வடக்கு : காணித் துண்டு இலக்கம் 1311 1/3;
கிழக்கு : காணித் துண்டு இலக்கம் 1351;
தெற்கு : காணித் துண்டு இலக்கம் 1351 மற்றும் 1349;
மேற்கு : காணித் துண்டு இலக்கம் 1349, 1348 1311 1/3.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்கப்பட முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.09 ஆம் திகதியிலிருந்து 2053.10.08 ஆந் திகதி வரை)

(ஆ) **வருடாந்தக் குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா. 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.10.09 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும். குத்தகையானது தொடர்ச்சியாகச் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் செலுத்தப்படாத எஞ்சிய பணத்திற்கு 10% தண்டப் பணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 15.

03 - 310